# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group II தேர்வு

பாடம் : பொதுத்தமிழ் (இலக்கணம்)

பகுதி : **பெயர்ச்சொல்லின் வகையறிதல்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 2 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# பெயர்ச்சொல்லின் வகையறிதல்

**பெயர்ச்சொல்**

- ஏதேனும் ஒன்றின் பெயரைக் குறிக்கும் சொற்கள் பெயர்ச்சொற்கள் எனப்படும். அஃது
- 6 வகைப்படும்.
    - பொருட்பெயர் - நூல், மரம், நீர்
    - இடப்பெயர் - மதுரை, கோவில், பள்ளி
    - காலப்பெயர் - பகல், நாள், மாதம்
    - சினைப்பெயர் - கண், கால், பூ, வேர்
    - பண்புப்பெயர் (குணப்பெயர்) - பசுமை, சதுரம், பெருமை (நிறம், சுவை, அளவு, வடிவம்)
    - தொழிற்பெயர் - படித்தல், ஆடுதல், ஓடுதல்

**பொருட்பெயர் :**

- ஒரு பொருளைக் குறிக்கும் பெயர் பொருட்பெயர் ஆகும். இது இருவகைப்படும். அவை:
    1. உயிருள்ள பொருள்கள் - குமரன், மலர்க்கொடி, தென்னை, வெள்ளாடு, ஓணான், கண்ணன்
    2. உயிரற்ற பொருள்கள் - நாற்காலி, அடுப்பு தட்டு, எண்ணெய், மண், நீர், காற்று

**இடப்பெயர் :**

- ஓரிடத்தைக் குறிக்கும் சொற்கள் இடப்பெயர் ஆகும்.
  எ.கா : அன்பகம், பெரியார் தெரு, ஆரக்காடு, கொல்லிமலை, வேலூர், நாமக்கல்

**காலப்பெயர் :**

- கண் இமைக்கும் நொடிப்பொழுது முதல் ஊழிக்காலம் வரை எல்லாமே காலத்தைக் குறிக்கும் பெயர்கள் காலப்பெயர்கள் எனப்படும்.
- எ.கா : நொடி, விநாடி, திங்கள், ஆண்டு, மணி, பருவகாலம், தைத்திங்கள், நண்பகல்

**பண்புப் பெயர் (அ) குணப்பெயர் :**

- பொருள்களின் பண்பைக் குறிக்கும் பெயர்ச் சொற்கள் பண்புப் பெயர் எனப்படும். பண்புப் பெயர் குணப்பெயர் எனவும் அழைக்கப்படுகிறது. இது நிறம், வடிவம், அளவு, சுவை ஆகியவற்றின் அடிப்படையில் பெரும்பாலும் வழங்கப்படும்.

- ✶ **நிறப்பண்பு :** வெண்மை, கருமை, செம்மை, பச்சை
- ✶ **வடிவப் பண்பு :** வட்டம், சதுரம், முக்கோணம், செவ்வகம்
- ✶ **அளவுப் பண்பு :** மூன்று, ஒன்று, $\frac{1}{2}$ , $\frac{1}{4}$
- ✶ **சுவைப் பண்பு :** கார்ப்பு, துவர்ப்பு, இனிப்பு, கசப்பு

எ.கா : பத்து மீட்டர் துணி, ஐந்துபடி, எண்ணெய், பத்துக்கிலோ அரிசி, வட்டப் பலகை, சதுர வீடு, செவ்வகப் புத்தகம், முக்கோணக் கூம்பு, வட்டம், அழகு

- ❖ பண்புப் பெயர் விகுதிகள் பின்வருமாறு -மை, ஐ, சி, பு, உ, கு, றி, று, அம், நர், பம், து, மன், இல்

| | |
|---|---|
| நன்மை = நல் + மை | நன்றி = நல் + றி |
| தொல்லை = தொல் + ஐ | நலம் = நல் + அம் |
| மாட்சி = மாண் + சி | நோக்கம் = நோக்கு + அம் |
| மாண்பு = மாண் + பு | திட்பம் = திண் + பம் |
| நன்கு = நல் + கு | தீது = தீமை + து |

**சினைப்பெயர் :**

- ❖ மனித உறுப்புகள், விலங்கு உறுப்புகள், தாவரப் பகுதிகள், பொருட்களின் பகுதிகளைக் குறிக்கும் பெயர் சினைப்பெயர்கள் எனப்படும்.

  எ.கா : தலை, கண், மூக்கு, செவி, நாக்கு, வேர், தண்டு, இலை, பூ, காய், கனி, விதை, முகம், கை

**தொழிற்பெயர் :**

- ❖ ஒருவர் செய்யும் தொழிலைக் குறிக்கும் பெயர்கள் தொழிற்பெயர்கள் எனப்படும். தொழிலைக் குறிக்கும் அனைத்தும் தொழில் பெயர்களே ஆகும்.
- ❖ தொழில் பெயர்கள் விகுதி பெற்றும், விகுதி பெறாமலும் அமையும்.

  எ.கா : ஆடல், பாடல், தொண்டு, கூட்டு, நசை
- ❖ தொழிற்பெயர் விகுதிகள் பின்வருமாறு - தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு, ஆணை, மை, து

| | |
|---|---|
| பெறுதல் = பெறு + தல் | கோடல் = கோடு + அல் |
| ஆட்டம் = ஆடு + அம் | வாழ்க்கை = வாழ் + கை |
| பறவை = பற + வை | புளிப்பு = புளி + பு |
| போக்கு = போ + கு | வரவு = வர + உ |
| தோற்றரவு = தோற்று + அரவு | கோட்பாடு = கொல் + பாடு |
| பாய்த்து = பாய் + து | கேளானை = கேள் + ஆணை |

| | |
|---|---|
| மறதி = மற + தி | உணர்ச்சி = உணர் + சி |
| செய்யுள் = செய் + உள் | கொலை = கொள் + ஐ |
| புலவி = புல + வி | சாக்காடு = சா + காடு |
| நடவாமை = நட + ஆ+ மை | தாழால் = தாழ் + ஆல் |

**தொழிற்பெயர் வகைகள் :**

தொழிற்பெயர் இரு வகைப்படும்

1. முதனிலைத் தொழிற்பெயர்
2. முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்

**முதனிலைத் தொழிற்பெயர் :**

- தொழிற்பெயர் விகுதிகளே இல்லாமல் பகுதி மட்டும் வந்து தொழிலை உணர்த்துவதற்கு முதனிலைத் தொழிற்பெயர் என்று பெயர்.
  எ.கா : கபிலனுக்கு அடி விழுந்தது, சுடு, கெடு.
- இதில் அடி என்பது விகுதி பெறாமல் பகுதியாய் நின்று தொழிலை உணர்த்துகிறது.

**முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் :**

- தொழிற்பெயரின் முதனிலையாகிய பகுதி திரிந்து வருவது முதனிலைத் திரிந்த தொழிற்பெயராகும். முதனிலைத் திரிந்த தொழிற்பெயரில் முதலெழுத்து நீண்டு ஒலிக்கும்.
  எ.கா : அறிவறிந்து மக்கட் பேறு
  அவனுக்கு என்ன கேடு
- இங்கு பெறு, கெடு, என்னும் முதனிலைகள் பேறு, கேடு எனத் திரிந்து பெறுதல், கெடுதல் என்ற பொருளை உணர்த்துகின்றன.

**வினையாலணையும் பெயர்**

- ஒரு வினைமுற்று வினையை உணர்த்தாமல் அவ்வினைக்குரிய கருத்தாவை உணர்த்தி எழுவாயாக நின்று வேற்றுமை உருபுகளை ஏற்றும் ஏற்காமலும் வருமாயின் அது வினையாலணையும் பெயர் எனப்படும்.
- வினையாலணையும் பெயர் மூன்று காலத்தையும் உணர்த்தும், பெயர்க்குரிய வேற்றுமை உருபுகளையும் பெற்று வரும்.
  எ.கா : முருகன் பரிசு பெற்றான்- நிகழ்காலம்
  பரிசு பெற்றானை பாராட்டினர் - இறந்தகாலம்
- இவ்விரு தொடர்களிலும் பெற்றான் என்ற வினைச்சொல் வந்துள்ளது, முதல் தொடரிலுள்ள பெற்றான் என்ற சொல் முருகன் எனும் எழுவாய்க்கு

பயனிலையாக அமைந்துள்ளது. ஆனால் இரண்டாம் தொடரிலுள்ள பெற்றானை என்ற சொல் வினை செய்தவரைக் (முருகன்) குறிக்கிறது.

| **தொழிற்பெயர்** | **வினையாலணையும் பெயர்** |
|---|---|
| தொழிலுக்குப் பெயராய் வரும் | தொழில் செய்பவருக்குப் பெயராக வரும் |
| படர்க்கை இடத்தில் மட்டுமே வரும் | மூவிடங்களிலும் வரும் |
| பெரும்பாலும் காலங்காட்டாது | முக்காலத்தையும் காட்டும் |

**வினைச்சொல் :**

- ❖ பொருள்களின் செயலை, இயக்கத்தை, தொழிலை உணர்த்தும் சொற்கள் வினைச்சொற்கள் எனப்படும்.
  எ.கா : சக்தி படிக்கிறான், கண்ணன் எழுதுகிறான், மாணவர்கள் விளையாடுகிறார்கள், பறவைகள் பறக்கின்றன.
- ❖ மேலே உள்ள சொற்றொடரில் படிக்கிறான், எழுதுகிறான், விளையாடுகிறார்கள், பறக்கின்றன என்பவை ஒரு செயலை (அ) வினையைக் குறிக்கின்றது. அதனால் இவை வினைச் சொற்கள் எனப்படும்.

**ஒரு குணம் தழுவிய பல உரிச்சொல்**

- ❖ சால, உறு, தவ, நனி, கூர், கழி - மிகுதிப் பொருளை உணர்த்தும்
- ❖ நனி, பேரை, கழி நல் குரவு, சாலவும் சிறந்தது, உறுபொருள்

**பல குணம் தழுவிய ஓர் உரிச்சொல்**

- ❖ "கடி" - விரைவு, மணம், காவல், கூர்மை, அச்சம், புதுமை
- ❖ மேலும் - தா, மழ, மா, இரு, குரு போன்ற சொற்களும் உரியே ஆகும்.

**உரிச்சொல்:**

- ❖ சால, உறு, தவ, நனி, கூர், கழி, இச்சொற்கள் ஒரு சொற்றொடரில் வந்து "மிகுதி" என்னும் குணத்தை உணர்த்தி வரும் சொற்கள் உரிச்சொற்கள் எனப்படும்.
  எ.கா. - சாலச் சிறந்தது. உறுப்பொருள் தவச்சிறிது நனி பேசினான் கழி உவகை
- ❖ இதேபோல் கடி என்பது பல குணம் தழுவிய ஓர் உரிச்சொல் ஆகும்.
  எ.கா. - கடிநகர், கடிவேல், கடிமுரசு, கடி மலர்

**இலக்கண வகை**

1) பெயர்ச் சொல் 2) வினைச் சொல் 3) இடைச்சொல் 4) உரிச்சொல்

**இலக்கிய வகை**

1) இயற்சொல் 2) திரிச்சொல் 3) திசைச்சொல் 4) வடசொல்

**இயற்சொல் :**

- கற்றவர், கல்லாதவர் ஆகிய அனைவரும் பொருள் புரிந்து கொள்ளும் வகையில் இயல்பாக அமைந்த தமிழ் சொல் ஒவ்வொன்றும் இயற்சொல் எனப்படும்.
  எ.கா : காற்று, வானம், மழை, ஞாயிறு, பலகை, மண், தீ, பூ, வீடு, கோழி, மரம்

**இயற்சொல் இரண்டு வகைப்படும் :**

- பெயர் இயற்சொல் - காற்று, வானம், மலை - எளிதில் பெயரை உணர்த்தும்.
- வினை இயற்சொல் - வந்தான், படித்தான், சென்றான் - எளிதில் வினையை உணர்த்தும்.

**திரிசொல் :**

- இயல்பான நிலையிலிருந்து திரிந்து கற்றவர் மட்டுமே அறிந்து கொள்ளக்கூடியவனவாகவும், பிறர் விளங்க கூறினால் மட்டுமே பொருளை உணர்த்துவது திரிசொல் எனப்படும்.
- கற்றவர்களால் மட்டுமே புரிந்து கொள்ளும் சொற்கள் திரிசொல் எனப்படும்.
  எ.கா : பீலி - மயில்தோகை , உகிர்- நகம்  ஆழி - தேர்ச்சக்கரம், கடல்

**திரிசொல் இரண்டு வகைப்படும் :-**

- பெயர் திரிசொல் - ( வேய், மடி, நல்குரவு, கழை)
- வினை திரிசொல் - வினவினான், விளித்தான், நோக்கினார், கேட்டான், அழைத்தான், பார்த்தார்

**திசைச்சொல் :**

- தமிழ்நாட்டைச் சூழ்ந்துள்ள பிற மாநிலங்களிலிருந்து தமிழில் வந்து வழங்கும் சொற்கள் திசைச்சொல் எனப்படும். ஆனால் இவை தமிழ்சொற்கள் அல்ல.
  எ.கா : கேணி- கிணறு , பெற்றம் - பசு,
- பண்டிகை- திருவிழா வியாபாரம்- வாணிகம், தாய்- ஆய்

**வடசொல் :**

- வடமொழி (சமஸ்கிருதம்) போன்ற மொழிகளிலிருந்து சொற்கள் திரிந்தும் திரியாமலும் தமிழில் வழங்கப்படும் சொற்கள் வடசொல் எனப்படும்.
  எ.கா : கமலம், விஷம், புஷ்பம்